*இணையத்தில் பதிவிறக்கம் செய்ய*www.iaraindia.com
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# நாலடியாரில் அறநெறிச் சிந்தனைகள்

**முனைவர் கா.லிங்கவேல்,**
முதுகலை தமிழ் ஆசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி,
சிவகுருநாதபுரம், சுரண்டை,
தென்காசி மாவட்டம்,
அ.கு.எண்: 627859

**முன்னுரை:**

தமிழ் இலக்கியங்களின் முக்கியமான நோக்கம் வாழும் மக்களுக்கு அறம் உரைப்பதே ஆகும். மனித இனத்தை மேலும் மேன்மை அடையச் செய்வது, **“ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி”** என்பது ஆன்றோர் முதுமொழி ஆகும். பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் முதலாவதாக வைத்து எண்ணப்படும் பெருமைக்குரியனவாகும். நூல் முழுமைக்கும் நானூறுப் பாடல்களை நாற்பது அதிகாரங்களாக பகுத்தும், தொகுத்தும் அமைக்கப்பட்டு உள்ளதை நாம் காணலாம். நாலடியாரில் அறநெறி சிந்தனைகள் என்னும் தலைப்பில் (ஐ)கல்வி (ஐஐ)சமூகம் (�i)அறன் வலியுறுத்தல் (ii)நட்புறவு (iii)ஒற்றுமை வாழ்க்கை (iv)பொருளாதாரப் பரிவர்த்தனை (v)பிறருக்கு உதவும் மனப்பான்மை (vi)நிலையாமைத்தத்துவம் (vii)பிறன்மனை நோக்கா பேராண்மை (viii)கற்பு நெறி மகளிர் (ix)பெருமை (ஐஐஐ)ஆன்மீக வாழ்க்கை (ஐஏ)அரசியல் அறம் ஆகிய தலைப்புகளில் ஆராயப்பட்டுள்ளது.

**ஐ கல்வி**

ஆறறிவு படைத்த மனிதன் கல்விக் கற்பதனால் முழுமைப் பெறுகிறான். ‘‘கற்கை நன்றே, கற்கை நன்றே, பிச்சை புகினும் கற்கை நன்றே’’ என்பார் ஔவையார். நாடாளும் மன்னனை விட கல்வி கற்ற ஒருவனே சிறப்புடையவன் என்பதை கற்றோர்களுக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்பதை மூதுரை 26-வது பாடல் வாயிலாக அறியலாம்.

**கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையர் கல்லா தவர் (குறள் எ- 393)**

கற்றவர்களே கண் உடையவர்கள், கல்வி கற்காத ஒருவர் முகத்தில் இரண்டு புண்களை உடையவர் என்று திருவள்ளுவர் கூறுவதையும் நாம் அறிந்ததே. நாலடியாரில் பொருட்பால் 14-வது அதிகாரமான கல்வியில் ஓர் ஆண் மகனுடைய தலைமுடி அவனுடைய மற்ற படைபலங்கள், அடுத்ததாக பெண்கள் ஒப்பனைச் செய்து கொள்ளும் மஞ்சளும் மானிடருக்கு அழகு சேர்ப்பது இல்லை. சான்றாக நல்ல கல்வி கற்று நடுவுநிலை மாறாமல் உள்ளத்தால் நல்லவர்களாய் வாழும் வாழ்க்கையே ஒரு மனிதனுக்கு அழகு தரும் என்பதை உறுதிபட கூறுவதைக் காணலாம்.

**குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும் மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து நல்லம்யாம் என்னும் நடுவு நிலையால்**
**கல்வி அழகே அழகு – (நாலடி-131) – (குஞ்சி-ஆண் தலைமுடி)**

இந்த உலகில் கல்வி ஒன்றே அழியாத செல்வம் ஆகும். வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படாது. வெந்தழலால் வேகாது. பகைவராலும் வெல்ல முடியாது, கள்வராலும் கொள்ளை போகாத ஒரே ஒரு நிலையான செல்வம் எனலாம்.

ஐஐ **சமூகம்**

(i) **அறன் வலியுறுத்தல்:-**

தன் மனதில் குற்றம் இல்லாமல் இருப்பதே சிறநத் அறம் என்பார் தெய்வப்புலவர் திருவள்ளுவர். ஆம் உண்மைதான். இவ்வுலகம் இன்னும் சீராக இயங்கிக்கொண்டிருக்கும் நிலைக்கு அறம் சார்ந்த செயல்பாடுகளும், அதனால் விளையும் பயன்பாடே காரணம் என்பர்.

**மக்களா லாய பெரும்பயனும் ஆயுங்கால்**
**எத்துணையும் ஆற்ற பலவானால் - தொக்க உடம்பிற்கே ஒப்புரவு செய்தொழுகா தும்பர்க் கிடந்துண்ணப் பண்ணப் படும் - (நாலடி – 37)**

இப்பூமியில் நாம் மக்களாகப் பிறந்த தன் பலன் என்னவென்று ஆராய்ந்தால் அவை பல திறப்பட்டவையாக இருந்தாலும் நம் பிறவிப்பயன், நம் உடல் உறுப்புகளுக்கு சுகமும், நாவிற்கு சுவையும் தருகிற செயல்களில் மட்டும் ஈடுபட்டு மகிழ்வது இல்லை. மாறாக, பேரின்ப வாழ்வுதரும் நல்லறம் செய்வதே பிறவிப் பயன்பாடு என்கிறது நாலடியார்.

(ii) <u>நட்புறவு</u>:-

நட்பு பற்றி கூறவந்த திருவள்ளுவர் கூட நான்கு அதிகாரங்களில் நாற்பது குறள்கள் (1. நட்பு, 2. நட்பாராய்தல் 3. தீ நட்பு, 4. கூடா நட்பு ) பாடியுள்ளார். ஆனால் நாலடியார் முப்பது பாடல்களில் 1. நட்பாராய்தல் 2. நட்பிற் பிழை பொருத்தல் 3. கூடா நட்பு நட்பின் நன்மை, தீமை ஆகியவற்றை அறிந்து கொள்ள முடிகிறது.

**நல்லா ரெனத்தூம் நனிவிரும்பிக் கொண்டாரை**
**அல்லா ரெனினும் அடக்கிக் கொளல் வேண்டும்**
**நெல்லுக் குமியுண்டு, நீர்க்கு நுரையுண்டு**
**புல்லிதழ் பூவிற்கும் உண்டு (நாலடி - 221)**

ஒருவரை நல்லவர் என நம்பி நாம் ஏற்றுக்கொண்ட ஒருவரிடம் சிறு தவறுகள் காணப்பட்டாலும் நாம் தாங்கிக் கொள்ளவேண்டும். உயிர் காக்கும் உணவு தரும் நெல்லுக்கும் தவிடு என்ற ஒரு குறை உண்டு. நுரை என்னும் களங்கம் நீரின் தூய்மையைக் கெடுக்கும். நன்கு மணம் பரப்பும் பூவிற்கும் புற இதழ் உண்டு. ஆதலால் குணம் நாடி, குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி நண்பர் குறை தாங்குதல் நிறைவான பண்பு என்பதை வலியுறுத்தி கூறுவதை அறியலாம்.

**iii) ஒற்றுமை வாழ்க்கை:- அழன்மண்டு போழ்தின் அடைந்தவர்கட் கெல்லாம் நிழன்மரம்போல் நேரொப்பத் தாங்கிப் - பழுமரம்போல் பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே நல்லாண் மகற்குக் கடன் (நாலடி - 202)**

‘வெயிலின் அருமை நிழலில் தெரியும்’ என்ற பழமொழிக்கு ஏற்ப ஒருவர் வெப்பத்தால் வாடி வருந்தி ஒதுங்க நிழல்தேடி வருபவர்களுக்கு மரம் குளிர்ந்த நிழல் தந்து உதவுகிறது. பழுத்த மரங்கள் தன்னை அண்டியவர்களுக்கு உண்ணக் கனி கொடுத்து உதவுகின்றன. இதுபோலவே பலரும் பயன் அடைந்து மகிழும்படி வாழ்வதே பாடுபட்டு பணம் சேர்த்து வாழும் ஆண்மகனுக்கு அதுவே அழகாகும் என்ற செய்தியை நாலடியார் மூலம் நாம் நன்கு அறியலாம். மேலும், பெரியோர்களிடம் காணப்படும் பெருஞ்சிறப்பு சிறியர்பெரியர் என்ற வேறுபாடு இன்றி எல்லோரிடத்தும் அன்பும், பணிவும் காட்டும் தன்மை, அடக்கம் என்னும் உயர் பண்பாடு கொண்டு விளங்கும். பணம் படைத்தவர்கள் தம்மை அண்டி வருபவர்களின் துன்பம் துடைத்து அவர்களுக்கு உதவி செய்து வாழ்பவர்கள் உண்மையில் அருட்செல்வர் என்னும் சிறப்புக்கு உரியார் என்று அனைவராலும் போற்றப்படுவர்.

**பெரியார் பெருமை சிறுதகைமை ஒன்றிற்**
**குரியா ருரிமை யடக்கம் - தெரியுங்கால் செல்வ முடையாருஞ் செல்வரே தற்சேர்ந்தார் அல்லல் களைப வெனின் - (நாலடி - 170)**

iv) <u>பொருளாதாரப் பரிவர்த்தனை</u>:-

தான் பெற்ற செல்வத்தின் பயனை தானும் அனுபவிக்க மாடட்டான். துறவிகளுக்குக் கூட தந்துதவ மாட்டான். வீணாக அதைப் பாதுகாத்து வைத்து கொண்டிருக்கும் அறிவில்லாத மூடனைப் பார்த்து அவன் சேர்த்து வைத்திருக்கிற பொருள்கூடக் கேலி செய்யும். மேலும் உலகின் நல்லறம் அவனைப் பார்த்துச் சிரிக்கும். என்பதை

**துய்த்துக் கழியான் துறவோர்க்கொன்றீகலான் வைத்துக் கழியும் மடவோனை – வைத்த பொருளும் அவனை நகுமே உலகத்து**
**அருளும் அவனை நகும் (நாலடி – 273)**

நாலடி உணர்த்துவதை அறியலாம். மேலும், மிகுந்த அலையை வீசும் கடல்நீர நமக்கு அருகே இருந்தாலும் தம் தாகம் தீர்க்க மனிதர்கள் அதை நாடிசெ சலவ் திலன் ல. குறைந்த அளவே நீர் இருந்தாலும் குளம், கிணறு, ஆறு போன்ற நீர் நிலைகளையே நாடுவர். அதுபோலவே, செல்வம் உடைய பெரும் பணம் கொண்ட அற்பர் அருகே இருந்தாலும் அவரிடம் செல்லாது. பிறர்க்கு உதவும் மனம் உடைய நல்லவர் வெகு தொலைவில் இருந்தாலும் வறியவர் அவர்களிடமே சென்று பயன்பெறுவர்.

**மல்கு திரைய கடற்கோட் டிருப்பினும் வல்லூற் றுவரில் கிணற்றின்கட் சென்றெண்பர்**
**செல்வம் பெரிதுடைய ராயினும் சேட்சென்றும்**
**நல்குவார் கட்டே நசை (நாலடி-263) (சேட - தொலைவில்)**

v) <u>பிறருக்கு உதவும் மனப்பான்மை</u>:-

மழைக்காலத்தில் பெருக்கெடுத்து வரும் ஆறு நீரால் உலகுக்கு உணவூட்டி நீர்ப்பெருக்கும் சிறந்து விளங்கும் கோடை காலத்தில் நீர் வற்றி வறண்ட போதும் தனது ஊற்று நீரால் மக்களுக்கு உதவும் தன்மை போல பிறருக்கு உதவும் பெரியோர்கள் வறுமைப்பட்ட நேரத்திலும் சிலருக்காவது கொடுத்து உதவும் நற்செயலை தொடர்ந்து செய்து கொண்டே இருப்பர் என்ற செய்தியை பின்வரும் பாடலில் அறியலாம்.

**உறுபுனல் தந்துல கூட்டி அறுமிடத்தும்**
**கல்லூற் றுழியூறும் ஆறேபோல் - செல்வம் பலர்க்காற்றிக்**
**கெட்டுலந்தக் கண்ணும் சிலர்க்காற்றிச் செய்வர் செயற்பா லவை (நாலடி – 185)**

vi) நிலையாமைத் தத்துவம்:-

நாலடியார் தம் நூலில் முதல் மூன்று அதிகாரங்களில் செல்வம், இளமை, யாக்கை ஆகியன இவ்வுலகில் என்றும் நிலையற்ற தன்மை உடையன என்பதை **'உள்ளங்கை நெல்லிக்கனிப் போல'** தெற்றென தெளிவாக உணர்த்தும் தன்மை கொண்டனவாக அமைந்துள்ளதை அறியமுடிகிறது.

**செல்வர்யாம் என்று தாம் செல்வுழி எண்ணாத**
**புல்லறிவாளர் பெருஞ்செல்வம் எல்லில்**
**கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போல்**
**தோன்றி மருங்கறக் கெட்டு விடும் (நாலடி - 8)**

நாம் இன்று பெருஞ்செல்வம் பெற்று உள்ளோம் என்ற இறுமாப்பில் நாளை என்ன நடக்கும் என்பதை உணராது வாழ்பவர் நம்மில் பலர் உண்டு. செல்வமும் வாழ்க்கையும் இருளில் தோன்றி மறையும் மினன் லைபே பால் நிலையற்ற தன்மைக் கொண்டது. எனவே நாம் வாழும் போதே நல்லறங்களை உடனே செய்து முடித்தல் வேண்டும என்று வலியுறுத்திக் கூறுவதை உணரலாம். மேலும் நாலடியார் இளமைப் பற்றிக் கூறும்போது குளிர்ந்த சோலையில் காய்த்து பழம் பழுத்து குலுங்கும் மரங்கள் எல்லாம் ஒருநாள் உதிர்ந்து வெறுமையுற்று இருப்பதைப் போல இளமையும் அழகும் தன்னைவிட்டு காலத்தால் கழிந்துபோகும். அதுபோல வேல் போன்ற கண்ணுடையவள் என்று விரும்பி நீங்கள் ஆசை வைக்கும் அவளும் ஒருநாள் கோல் ஊன்றி நடக்கும் கூன் உடைய முதுகு தோன்றி முதியவளாக வாழும் வாழ்க்கையை உணர்த்துகிறது.

**பருவம் எனைத்துள பல்லின்பால் ஏனை**
**இருசிகையும் உண்பீரோ என்று வரிசையால் உண்ணாட்டம்**
**கொள்ளப்படுதலால் யாக்கைக் கோள் எண்ணார் அறிவுடை யார் (நாலடி-18)**

அடுத்ததாக, யாக்கை பற்றி நாலடியார் கூறும் போது பனிக்காலங்களில் புல் நுனியில் மேல் பனிநீர் முத்துமுத்தாக தங்கியிருக்கும் அப்பனி நீர் வெய்யோன் வரவர ஆவியாகி மறைநது போகும். அதுபோல இவவ் டம்பு ஒருநாள் மறைந்து போகும் தன்மை கொண்டது. ஆகையால் இப்பூத உடலைத் தாங்கி வாழும்போதே நல்லறம் செய்து முடிக்க வேண்டும். மாறாக இப்போது நன்றாகத்தான் இருந்தான். நோயென்று படுத்தான், சுற்றத்தார் கதறி அழ செத்து விட்டான் என்ற நிலை எப்போது வேண்டுமானாலும் ஒருவருக்கு வரலாம் என்ற நிலையாமைத் தத்துவத்தை **'பசுமரத்து ஆணிபோல'** பதமாக கூறிச் செல்வதை அறியலாம்.

**புல்நுனிமேல் நீர்போல் நிலையாமை என்றெண்ணி இன்னினியே**
**செய்க அறவினை - இன்னினியே நின்றான் இருந்தான் கிடந்தன**
**தன்கேள்அலறச் சென்றான் எனப்படுதலால் (நாலடி - 29)**

vii) **பிறன்மனை நோக்கா பேராண்மை:-**

வில் விடும் அம்பும், கொடிய நெருப்பும், சூரிய வெப்பமும் சுடுகின்ற தன்மை உடையவை என்றாலும் அவை சுட்டுத் துன்புறுத்துவது வெளி உடலைத்தான். ஆனால் அழுது வருந்தும்படி மனத்தைச் சுட்டுத் துன்புறுத்துவதால் பிறன்மனைவியை விரும்புகிற பாதகச்செயல் அம்பையும், நெருப்பையும் விட தீயது என்று பயந்து ஒதுக்க வேண்டும் என்பதை,

**அம்பும் அழலும் அவிர்கதிர் ஞாயிறும்**
**வெம்பிச் சுடினும் புறஞ்சுடும் - வெம்பிக்**
**கவற்றி மனத்தைச் சுடுதலால் காமம்**
**அவற்றினும் அஞ்சப் படும் (நாலடி - 89)**

எ.கா கமப் ராமாயணத்தில் வரும் இராமன ் மனநிலை போலும் ஒவெ வாரு மானிடனும் வாழவேண்டும் என்பதை உறுதியாக கடைபிடிக்க வேண்டும்.

viii) **கற்புநெறி மகளிர்:-**

நாலாறும் ஆறாய் நனிசிறிதாய் எப்புறனும் மேலாறு மேலுறை சோரினும் - மேலாய வல்லாளாய் வாழும் ஊர்தற்புகழ மாண்கற்பின்
இல்லாள் அமர்ந்ததேஇல் - (நாலடி - 383)

வீட்டின் நான்கு பக்கம் சுவர்களும் இடிந்தும், அந்த வீடும் மிகச் சிறியதாகவும், மழை பெய்தால் உள் ஒழுகும் பிய்ந்த கூரை உடையதாகவும் இருந்த பொழுதும் இவை எல்லாவற்றையும் பொறுத்தும் கொண்டு வாழும் மனவலிமையும், ஊர்மக்கள் போற்றிப்புகழும் கற்பு நெறியும் உடைய மனைவி இருக்கிற வீட்டிற்குத்தான் வீடு என்று பெயர் அதுவே நல்லறம் என்று கருதப்படும்.

ஐஓ) **பெருமை:-**

ஒருவர் எப்போதும் நல்லவர்களுடன் சேர்ந்திருத்தல், இன்சொல் பேசுதல், பொருள் இல்லாதவர்களுக்கு ஒன்றை கொடுத்து உதவுதல், மேலும் மனத்தளவில் மாசற்றவனாக வாழ்தல் ஆகிய எல்லா நல்ல குணங்களும், மாணிக்கமும், முத்தும் ஒளிவீசும் கடற்கரைப் பட்டினத்துக்குரியவனே! உயர்குடியில் பிறந்தவர்களிடம் மட்டுமே பொருந்தி இருக்கக்கூடிய நல்ல குணங்களே பெருமை தருவனவாகும்.

**இனநன்மை இன்சொல் ஒன்றிதல் மற்றேனை மனநன்மை என்றிவை யெல்லாம் - கனமணி முத்தோ டிமைக்கு முழங்குவரித் தண்சேர்ப்ப**
**இற்பிறந்தார் கண்ணேயுள. (நாலடி - 146)**

ஐஐஐ ஆன்மீக வாழ்க்கை

நாலடியார் கடவுள் வாழ்த்துப்பாடல் அருகக்கடவுளை போற்றும் தன்மையை நாம் அறிந்ததே சமணமுனிவர்கள் பலா் இயற்றிய இந்நூலானது ஆன்மீக வாழக்கையைக் கூறும் போது ஒருமனிதன் தன் உடல், வாய், கண், காது, மூக்கு என்கிற ஐம்புலன்களாலும் எழும் ஆசையை அடக்கி அவற்றைத் தீயவழியில் செல்லாமல் காத்து நல்வழியில் செலுத்தும் மனவலிமை உடையவர்கள் நிச்சயமாக பேரின்ப வாழ்வு பெறும் பெருமைக்குரியவர் ஆவார்கள் என்பதை,ள

**மெய்வாய்கண் மூக்குச் செவியெனப்பேர் பெற்ற**
**ஐவாய வேட்கை அவாவினைக் - கைவாய் கலங்காமற் காத்துய்க்கும் ஆற்ற லுடையான் விலங்காது வீடு பெறும் (நாலடி-59)**

இப்பாடல் மூலம் அறியமுடிகிறது.

ஐஏ **அரசியல் அறம்:**

இவ்வுலகில் வாழும் பசுக்கள் பல நிறம் உடையவனாக இருக்கலாம். ஆனால் அவை எல்லாம் தரும் பாலின் நிறம் ஒரே வெண்மை நிறம்தான் எனப்தில் மாற்றம் இல்லை. அதுபோல முறை செய்து காப்பாற்றும் மன்னவன் உலகில் அறம் செய்யும் முறையும் வழியும் பலவாக இருந்தாலும் அதனால் வருகிற பயன் மக்களுக்கு நன்மை என்பதில் மாற்றம் இல்லை என்பதை,

**ஆவேறுருவின் வாயினும் ஆபயந்த**
**பால்வே லுருவின வல்லவாம் - பால்போல்**
**ஒருதன்மைத் தாகும் அறநெறி ஆபோல்**
**உருவு பலகொளல் ஈங்கு (நாலடி – 118)**

பாடல் மூலம் அறியலாம்.

**முடிவுரை:**

**நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம தீயொழுக்கம்**
**என்றும் இடும்பை தரும் (குறள் - 138)**

சொல் நயம், பொருள் நயம் மிகுந்த இந்நூல் திருக்குறளுக்கு இணையாகப் பெருமை பெற்று விளங்குகிறது. மேலும் ‘‘கல்வி கரையில கற்பவா் நாற்சில’’ எனும் பாடலில் வரும் ‘தெள்ளிதின் நீரொழியப் பாலுண் குருகின் தெரிந்து’ என்னும் பாடலடியில் வரும் அன்னப் பறவை ஒரு காலத்தில் வாழ்ந்ததாக அறியப்படும் வரலாற்றுப் பெட்டகமாக உள்ளது எனலாம். பாலோடு கலந்த தண்ணீர் எவ்வாறு வெண்மை நிறம் பெறுகிறது என்பதை ‘பருகற் கமைந்தபால் நீரளா யற்றே’ என்னும் பாடலடி நட்பின் தன்மையை விளக்கிக் கூறுவதாக அமைகிறது. மேற்கண்டவாறு கல்வி, சமூகம், ஆன்மீகம், அரசியல் ஆகிய தலைப்புகளில் நூல் முழுமையும் எடுத்துக்கொண்டு ஆராய்வதே இக்கட்டுரையின் தேடுபொருளாக அமைந்துள்ளது.

**ஆய்வுக்குப் பயன்பட்ட துணைநூற்பட்டியல்**


1. சமணமுனிவா் பலா், நாடிலயாா், உமா பதிப்பகம், திருவல்லிக்கேணி, சென்னை மூன்றாம் பதிப்பு ஜுன் 1998.
2. திருவள்ளுவா் திருக்குறள், பழனியப்பா பிரதா்ஸ், சென்னை 2002.
3. ஔவையாா் - ஆத்திசூடி, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை 108. மூன்றாம் பதிப்பு 1987.
4. தமிழ் இலக்கியக்கழகம் நன்னெறி நூல், தமிழ் இலக்கியக்கழகம் (பதிப்புரிமை), திருச்சிராப்பள்ளி 1980.